**தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம் - 2022**

-----------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று , உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 **நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

1.5.1 **இலங்கைப் பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| குறிப்பிட்ட நியமங்களுடனான தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 48 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட முடியாத போதிலும் வங்கி மீதிகளுக்கான ரூபா 13,883,347 ஆன வரவு மற்றும் செலவு மீதிகள் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | 2022/12 ஆம் திகதி 228,044 கணககிற்கான மீதி ரூபா 311,840,780.73 ஆகும். காசுப்புத்தகத்தில் ரூபா 13,883,347 ஆன மீதியொன்று காணப்பட்டதுடன் வங்கி நடைமுறைக் கணக்கில் மேலதிகப்பற்று மீதியொன்று இருக்கவில்லை. எமது நிறுவனத்தின் மேலதிக பணத்தை குறுகிய கால முதலீடுகளான Repo களில் முதலீடு செய்து வட்டியொன்று பெறப்படுகின்றது. | இலங்கைப் பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

1.5.2 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 6,981,370 ஆல் அதிகமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய முதலீட்டு வட்டி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நிறுவனத்தின் தேய்மானக் கொள்கையின்படி, மீளாய்வாண்டில் மூலதனமாக்கப்பட்ட ரூபா 10,843,201 கட்டிடங்கள் தொடர்பாக ரூபா 271,080 ஆன தேய்மானத்திற்கான ஏற்பாடுகள் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திரண்ட தேய்மானம் குறைவாக கணககிடப்பட்டமை 2023 ஆம் ஆண்டில் திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் குறிப்பிடப்பட்டதன்படி ஆவணப்படுத்தப்பட்டு தேய்மானம் கணிப்பிடப்படுதலானது மேற்கொள்ளப்பட வேண்டும். |

1.5.3 **முற்பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் கிளை அலுவலகங்கள் அமைப்பதற்காக அரசுக் கட்டிடங்களைப் பயன்படுத்துவதற்கு அல்லது நிரந்தரக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகள் | எதிர்காலத்தில் அரச கட்டிடங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரசின் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| எடுக்கப்படாது வாடகை அடிப்படையில் பெறப்பட்ட தனியார் துறைக் கட்டிடங்களுககாக மீளாய்வாண்டில் கட்டிட வாடகையாக ரூபா 31,437,501 செலுத்தப்பட்டிருந்தது. | | |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 9,190,238 இலங்கைப் போக்குவரத்துச் சபையிடமிருந்து பெறப்பட வேண்டியதாகக் காட்டப்பட்ட போதிலும், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் நிதிக்கூற்றுக்களில் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இப்பெற வேண்டிய தொகையை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டியவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான இணங்காமைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தெடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | நிறுவனத்தால் பணம் முதலீடு செய்யப்படும் போது நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அங்கீகாரம் பெறப்படாமல் ரூபா 1,513,150,579 ஆன தொகையொன்று நிலையான வைப்பு மற்றும் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | இந்த ரூபா 1,513,150,579 ஆன நிலையான வைப்பு மற்றும் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த தொகை புதிய முதலீடுகள் அல்ல என்பதுடன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் முதலீடுகள் செய்யப்பட்டிருந்தன. | நிதிச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 03/2022 ஆம் இலக்க 2022.04.26 ஆம் திகதிய தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை | பொதுச் செலவுக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு, அரச அதிகாரிகளின் முற்பணக் கணக்குகளின் கீழ் நிறைவேற்று அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்த கடன் வசதிகளை 2022 இறுதி வரை நிறுத்தி வைக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதற்கு மாறாக, நிறுவனத்தின் நிறைவேற்று அலுவலர்களுக்கு 2022ஆம் ஆண்டில், ரூபா 464,328 ஆன இடர்க் கடன தொகை செலுத்தப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டிலிருந்து திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 21/2015 ஆம் இலக்க 2015 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் தாபன விதிக்கோவையின் xxiv அத்தியாயத்தின் திருத்தப்பட்ட 13.2 மற்றும் 13.5 உப பிரிவுகள் | அதிகாரியின் விருப்பத்தின் பேரில் எந்த ஒரு வருடாந்த விழாவொன்றுக்காக ரூபா 10,000 வீதம் முற்பணத் தொகையொன்று வழங்கப்பட முடியுமான போதிலும் மருத்துவ நிறுவன ஊழியர்கள் 228 பேருக்கு அந்த வரம்பை மீறி ரூபா 30,000 வீதம் விழா முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில், நிறுவனத்தின் ஊழியர்களுக்கு முற்பணம் செலுத்தப்பட்டது. | சுற்றறிக்கை மற்றும் தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | பெறுகை வழிகாட்டிக் கோவை 5.4.8 ஆம் பிரிவு | நிறுவனத்தின் நடவடிக்கைகளுக்குத் தேவையான ரூபா 31,415,000 இலகுரக மற்றும் கனரக வாகன மருத்துவப் படிவங்களைப் பெற்றுக்கொண்ட போது 10 சதவீத | தற்போது ஒப்பந்தம் முடிவடையும் திகதியைக் குறிப்பிட்டு அதாவது 2023.08.06 ஆம் திகதி வரை செயற்திறன் உத்தரவாதமொன்று பெறப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல் களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | செயற்திறன் உத்தரவாதமொன்று பெறப்பட்டிருக்க வில்லை. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 422,911,481 இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 123,542,486 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 299,368,995 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. நிறுவனத்தின் இலகுரக வாகனங்கள் மற்றும் கனரக வாகனங்கள் சாரதிகளுக்கு வழங்கப்படுகின்ற மருத்துவ சேவைகளுக்கான கட்டணம் அதிகரித்திருந்தமை குறித்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

மீளாய்வாண்டில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மருத்துவ நிறுவகத்தின் முக்கிய வருமான உருப்படிகளில் உள்ளடங்கியுள்ள இலகுரக வாகன பரிசோதனைகளுக்கான வருமானம் 87 சதவீதத்தால் மற்றும் கனரக வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதற்கான மருத்துவக் கட்டணங்கள் வருமானம் 25 சதவீதத்தால் அதிகரித்திருந்தன.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டிற்கான நடைமுறை சொததுக்கள் விகிதம் 4.08 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டின் விகிதம் 2.1 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் இலாப விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 19 சதவீதத்தால் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. .

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 33,499,620 தொகையொன்று 5 முதல் 12 சதவீத வட்டி விகிதத்தில நிலையான வைப்புகளில் மற்றும் ரூபா 35,000,000 ஆனது 9.85 சதவீத வட்டி விகிதத்தில் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் தற்போதைய சந்தை சூழலில் அவற்றுக்காக அதிக வட்டி விகிதத்துடன் முதலீடுகளை செய்வதற்கு நிர்வாகம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | காலாவதியாகிய அனைத்து நிலையான வைப்புகள் 140 மில்லியன் 20% இற்கும் அதிகமான வட்டி விகிதத்தில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | அதிக நலன்களைப் பெறும் வகையில் முதலீடுகள் செய்யப்பட வேண்டும் |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவகத்தின் நடவடிக்கைகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் 75 மருத்துவர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 10 மருத்துவர்கள் மட்டுமே நிரந்தரமாக நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன் 20 கிளை அலுவகங்களுக்கு நிரந்தர அடிப்படையில் ஒரு மருத்துவரையாவது நியமிக்காமல் ஒப்பந்த அடிப்படையில 37 மருத்துவர்கள் மற்றும் பகுதிநேர அடிப்படையில் 98 மருத்துவர்களும் சேவையில் ஈடுபடுத்தப்படடிருந்தனர். | நிறுவனத்தில் நிரந்தர மருத்துவ பணியாளர்கள் குறைவாக உள்ளனர். எனவே, மருத்துவ பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் மற்றும் தினசரி மணிநேர அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, வாடிக்கையாளர்களுக்கு சிரமம் ஏற்படாத வகையில், சேவை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் ஆட்சோப்பு செய்யப்பட வேண்டும். |